1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால், விவரம் சொல்ல முடியும். கேள்வி அரசாங்கம் அந்தச் சாலைகளை எடுத்துக் கொள்வது பற்றி. அரசாங்கத்தின் வருமானத்தில் பங்கு கேட்பது பற்றித் தனியாகக் கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஆறுமுகம்: அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பஸ் போகும் பாதைகளை மட்டும் அரசு ஆயிரம் மைல்கள் எடுத்துக் கொள்ளப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பஸ் ரூட்டுகள் இல்லாமல் இருக்கும் பாதைகளைப் பற்றியும் மனத்தில் கருதி முக்கியமான பொதுப் பாதைகளை அரசு எடுத்துக் கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதற்காகத்தான் இணைப்புச் சாலைகளுக்கென்று தனியாக ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது. டி.டி.சி. கூட்டத்தில் தீர்மானம் போட்டு அனுப்பிய தற்கேற்ப அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் இணைப்புச் சாலைகள்

*586 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971–72ல் தமிழகத்தில் விவசாய விளை பொருட்கள் எடுத்துச் செல்லும் இணைப்புச் சாலைகள் அமைத்திட மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சியுள்ள மூன்று ஆண்டுக்கால அளவில் ரூ. 1.50 கோடி நிதி உதவி வரம்புக்குள், மத்திய அரசுத் துறையின் கீழ், தமிழ் நாட்டில் காவிரிப்பாசனப் பகுதியில் (தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு மாவட்டங்கள்) அங்காடிகளையும் இணைப்புச் சாலைகளையும் ஏற்படுத்துவதை முக்கியமாகக் கொண்ட பகுதி வளர்ச்சித் திட்டம் ஒன்றுக்கு இந்திய அரசு ஏற்பளித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தமிழகத்தில் மிக அதிகமான விளைபொருள்களை உற்பத்தி செய்து தருகின்ற தஞ்சை மாவட்டத்திற்கு இத்தகைய இணைப்புச் சாலைகளை அதிகமாக ஆக்கித் தர அரசு ஆலோசனை செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய அரசு சார்பாக $3\frac{1}{2}$ கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டு அனுப்பினேம். மத்திய அரசாங்கத்திலிருந்து $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்குள் திட்டம் போட்டு அனுப்புமாறு தெரிவித்திருக்கிறார்கள். அந்த $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு. இப்போது திட்டம் போடப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தத் திட்டத்தின்படி பாலங்கள் கட்டுவது, சாலைகள் போடுவது என்று மதிப்பீடு செய்த பிறகு பாலங்களைக் கட்ட வேண்டாமென்று மாநில அரசோ மத்திய அரசோ சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு உத்தரவு கொடுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே குறிப்பிட்டது போல் நம்முடைய அரசின் மூலமாக $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு 122 இணைப்புச் சாலைகளையும், 9 அங்காடிகளையும் இணைக்கும் வகையில் திட்டமிட்டு மத்திய அரசுக்கு அனுப்பிற்று. மத்திய அரசு $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு மட்டுமே திட்டமிட வேண்டுமென்று குறிப்பிட்டதன் காரணமாகச் சில திட்டங்களைக் கைவிட நேரிட்டது.

தேசிய நெடுஞ்சாலைகள்

*587 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?
Highways) இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்களை
துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையின் National

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நெடுஞ்சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்களை நடும்

அவசியத்தைக் கருதி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பும்படி அரசு தலைமைப் பொறியாளர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : இத்தகைய நெடுஞ்சாலையில் தற்போது திருச்சியிலிருந்து மதுரைக்கு திண்டுக்கல் வழியாக இருக்கும் தூரம் 100 மைல்; திருச்சியிலிருந்து மேலூர் வழியாக மதுரைக்கு இருக்கும் தூரம் 85 மைல். 15 மைல் தூரம் குறைவாக இருக்கின்ற மேலூர் சாலையைச் செப்பனிட்டு தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க அரசு ஆவன செய்யுமா ?